## வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனி – 2017

---

வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியினதும் (''கம்பனி'') கம்பனியினதும் அதன் துணைக் கம்பனியினதும் (''தொகுதி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில்கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

கம்பனி மற்றும் தொகுதியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறன நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவினால் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறாகும்

(ஆ) எனது அபிப்பிராயமாவது:

(i) எனது கணக்காய்விற்குத் தேவைப்பட்ட எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என்பதுடன், எனது பரிசோதனைகளிலிருந்து இது தென்படுகின்றவாறு கம்பனியினால் பொருத்தமான கணக்கீட்டுப் பதிவேடுகள் ணேப்பட்டிருந்தன.

(ii) கம்பனியின 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன

(iii) கம்பனி மற்றும் தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள | கம்பனி மீளாய்வாண்டில் அனுமதிக்கப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்வனவு நடைமுறைகளை பின்பற்றாமல் ரூபா 7,153,766 பெறுமதியான நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தது |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | |
| | (i) 5.1.3 ஆம் பந்தி | கம்பனி உருவாக்கப்பட்டது முதல் கூட்டிணைந்த திட்டமொன்று அதனால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (ii) 9.2 ஆம் பந்தி | கம்பனி பொது முயற்சிகள் திணைக்களத்துடன் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பதவியியணியினரை கொண்டிருக்கவில்லை. |
| | (iii)8.3.3ஆம்பந்தி | கம்பனி மீளாய்வாண்டில் ஊழியர் ஊக்குவிப்பாக ரூபா 5,050,011 ஆன தொகையை செலுத்தியிருந்ந பொழுதிலும், இது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட ஊக்குவிப்பு திட்டத்தை கொண்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 நொவம்பர் 18 ஆந் திகதிய நிதி முகாமைத்துவ உடன்படிக்கையின் 2 ஆம் அட்டவணை | முதலீட்டு குழு போர்ட்போலியோ (portfolio) செயல் திறனை மீளாய்வு செய்யும் நோக்கத்திற்காக காலாண்டு மீளாய்வு கூட்டத்தை நடத்த வேண்டும். இருப்பினும் கம்பனி இதுவரை இதனுடன் தொகுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிகூற்றுகளின் பிரகாரம், முன்னைய ஆண்டின் கம்பனியின் ரூபா 86,361,454 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது கம்பனியின் செயற்பாடுகள் ரூபா 2,780,996 ஆன வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தினை விளைவித்தமையானது கம்பனியின் நிதிசார் விளைவுகளில் ரூபா 83,580,458 ஆன முன்னேற்றத்தை காட்டுகின்றது. கம்பனியின் முதலீடு மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 88,695,869 இனால் அதிகரித்தமையானது நிதிசார் விளைவுகளில் இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணியாக பங்களித்திருந்தது.

அதே நேரத்தில் முன்னைய ஆண்டின் தொகுதியின் ரூபா 585,948,925 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது கம்பனியின் செயற்பாடுகள் ரூபா 160,580,557 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தினை விளைவித்தமையானது கம்பனியின் நிதிசார் விளைவுகளில் ரூபா 746,529,482 ஆன முன்றேற்றத்தை காட்டுகின்றது.கம்பனியின் முதலீடு மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 639,851,263 இனால் அதிகரித்தமையானது நிதிசார் விளைவுகளில் இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணியாக பங்களித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

#### 3.2.1 பாதிட்ட மற்றும் உண்மையான நிதி விளைவுகளை ஒப்பிடுதல்

மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட பாதிட்ட நிதிகூற்றுக்கள் மற்றும் உண்மையான நிதிகூற்றுக்களின் பிரகாரம், பாதிட்ட நிதிகூற்றுக்களுடன் ஒப்பிடுகையில் உண்மையான தேறிய வட்டி வருமானம் ரூபா 263,471 மற்றும் முகாமைத்துவ கட்டண வருமானம் ரூபா 356,050 ஆன அதிகரிப்பை காட்டுகின்றது.மறுபுறம், பாதிட்ட நிதிகூற்றுக்களுடன் ஒப்பிடுகையில் உண்மையான பிற செயற்பாட்டு வருமானம் ரூபா 11,271,804, மூலதன

இலாபம் ரூபா 4,534,094 மற்றும் துணைக்கம்பனியின் பங்கு இலாபம் ரூபா 100,000,000 ஆன குறைவை காட்டுகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------------

### 4.1 செயல்திறன்

----------------------------------

கம்பனியின் அகவிதிப்படி,கம்பனியின் முதன்மை நோக்கங்களாவன,(அ) நிதியியல் சேவை ஊடான மூலதன உருவாக்க முன்னேற்றம் மற்றும் மேம்பாடு, அனைத்து வகையான பிணைகளையும் விற்றல் அல்லது வாங்குதல், பிடித்தல் அல்லது பரிமாற்றல் மூலம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவது (ஆ) ஒன்று சேர்வது, இணைவதுடன் அல்லது பங்குடமையில் நுழைதல் அல்லது நிதி சேவைகளை வழங்கும் வியாபாரத்தை மேற்கொள்ளும் நோக்கத்திற்கான ஏற்பாடுகளை செய்தல். (இ) முதலீட்டு ஆலோசகராக அல்லது முகாமையாளராக வியாபாரத்தை மேற்கொள்வது மற்றும் பரிமாற்றம் செய்வது (ஈ) போர்ட்போலியோ (portfoilo) மற்றும் முதலீட்டு முகாமைத்துவத்தை மேற்கொள்ளவதும் மற்றும் (உ) நிதி / முகாமைத்துவ திறன்களின் அபிவிருத்தி, பயிற்சி மற்றும் பொது விழிப்புணர்வு நிகழ்சிகள் தொடர்பான வியாபாரத்தை மேற்கொள்வது. எவ்வாறாயினும், கம்பனி இந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு, கம்பனி உருவாக்கப்பட்டது முதல் கூட்டிணைந்த திட்டம் அல்லது தந்திரோபாயங்கள் அதனால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை .மேலும், மீளாய்வாண்டிலும் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், கம்பனியின் செயல்திறன் மீளாய்வாண்டில் கணக்காய்விற்கு உட்படுத்தப்படவில்லை.

### 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) காசு வெளிப்பாய்ச்சல்களை குறைப்பதனூடாக சந்தைக் கேள்வியினை எதிர் கொள்வதற்கான சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களை முறையாக அமுல்படுத்துவதற்கு கம்பனி தவறியிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.மேலும் கம்பனியினால் வலுவான வாடிக்கையாளர் தளமொன்று அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.ஆகையால் கம்பனியானது ரூபா 2,780,996 செயற்பாட்டு நட்டத்தினை தாங்கியிருந்தது.

(ஆ) கம்பனிக்கும் மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குமிடையிலான நிதி முகாமைத்துவ உடன்படிக்கையின் பிரகாரம், கம்பனியானது மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை முகாமை செய்யும் நோக்கத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியின் அகவிதியில் இதனை கம்பனியின் நோக்கமாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனவே நிதி முகாமைத்துவ ஒப்பந்தந்தின் செல்லுபடி நிலையானது கேள்விக்குறியாக உள்ளது.

### 4.3 சர்ச்சைத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------------------

2008/2009 இலிருந்து ஆரம்பிக்கின்ற கடந்த ஆறு மதிப்பீட்டு ஆண்டுகளிற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களமிடமிருந்து ரூபா 384,055,786 கூட்டுதொகைக்கான வருமான வரி மதிப்பீடுகள் கம்பனிக்கு கிடைத்திருந்த போதிலும், அந்த வரியினை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக கொடுப்பனவு தாமதத்திற்காக ரூபா 192,027,893 தொகையான 50 சதவீத தண்டப்பணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் விதிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கம்பனி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மதிப்பீடுகளின் அறிவிப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தது.

## 5 கணக்களித்தன்மையும் நல்லாட்சியும்

---

### 5.1 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

---

முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஆனால் போதிய கவனம் செலுத்தப்படாத கணக்காய்வுப் பந்திகள் கீழே தரப்படுகின்றன.

**(அ)** கம்பனி முதற்தர வணிகரொருவராக 2003 இல் இலங்கை மத்திய வங்கியிடம் பதிவு செய்திருந்தது. மஹபொல நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கும் கம்பனியிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம், எல்லா முதலீட்டுத் தீர்மானங்களும் மஹபொல நம்பிக்கைப் பொறுப்பினால் நியமிக்கப்பட்ட முதலீட்டு குழுவினாலேயே எடுக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், தேவைப்பாட்டிற்கு முரணாக கம்பனியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரும் பிரதான வணிகரும், வரையறுக்கப்பட்ட ரில்லியன் செக்யூரிட்டீஸ் (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட வேர்ச்சுஅல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் ட்ரேடிங் (தனியார்) கம்பனி ஆகியவற்றில் மறுகொள்வனவு கொடுக்கல் வாங்கல்களை செயற்படுத்துதல் தொடர்பான முதலீட்டுத் தீர்மானத்தை எடுப்பதில் சம்பந்தப்பட்டிருந்தனர். மேலும், இது தொடர்பில் எந்தவொரு அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. அதனைத் தொடர்ந்து இது தொடர்பில் தடயக் கணக்காய்வொன்றை கம்பனி மேற்கொண்டிருந்ததுடன் தடயக் கணக்காய்வு அறிக்கையின் படி, மேற்படி உத்தியோகத்தர்கள் முறையற்ற கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்வுத் திகதி 30 மே 2018 வரை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக கம்பனியால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) இலங்கை மத்திய வங்கியானது (சீ.பி.எஸ்.எல்) 2009 யூன் 24 ஆம் திகதிய 2009 இன் 01 ஆம் இலக்க உள்ளூர் திறைசேரி பிணைகள் (ஆரம்ப விநியோகஸ்தர்) பிரமாணங்களின் 11(2) ஆம் பிரமாணங்கள் மற்றும் 2009 யூன் 24 ஆம் திகதிய 2009 இன் 01 ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்கு மற்றும் பிணைகள் (ஆரம்ப விநியோகஸ்தர்) இன் 11(2) இன் பிரமாணங்களினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு வாடிக்கையாளர்களுடனான பிரதான மீள்கொள்வனவு உடன்படிக்கையின் உறுப்புரைகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர்களினால் மீள்கொள்வனவு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய எல்லா நிலுவைகள் தொடர்பாகவும் அறிவுறுத்தி கம்பனிக்கு 2015 ஆகஸ்ட் 07 இல் உத்தரவு ஒன்றினை விநியோகித்திருந்தது. சீபிஎஸ்எல் இந்த உத்தரவை மீளப்பெற்றிருக்காமையால் கம்பனி அதன் பிரகாரம் செயற்படுவதற்கான பொறுப்பினை கொண்டுள்ளது.

(iii) கம்பனி சீ.பி.எஸ்.எல் இனால் மேற்கொள்ளப்பட்ட வழிகாட்டலுக்கு எதிராக 2015 ஆகஸ்ட் 18 இல் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் முறையீடு ஒன்றினை பதிவு செய்திருந்ததுடன் மேல் முறையீட்டு நீதிமன்றமானது 2015 செப்தம்பர் 04 வரை சொல்லப்பட்ட உத்தரவை செயல்படுத்த வேண்டாம் என இடைக்கால தடை உத்தரவு ஒன்றினை பிறப்பித்திருந்தது. எவ்வாறாயினும், எல்லா பொறுப்பான தரப்பினர்களாலும் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதல்களினை கருத்திற் கொண்டதன் பிறகு, 2016 மார்ச் 29 இல் மேல் முறையீட்டு நீதிமன்றத்தால் மேற்படி இடைக்கால உத்தரவானது

திருப்பிப் பெறப்பட்டிருந்தது. பின்னர் மேல் முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக கம்பனி 2016 ஏப்ரல் 18 இல் உச்சநீதிமன்றத்தில் மற்றுமொரு முறையீட்டினை மேற்கொண்டது. ஆனால் உச்ச நீதிமன்றத்தால் கம்பனிக்கு சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.இருந்த போதிலும், கம்பனி 2016 திசெம்பர் 27 இல் சீபிஎஸ்எல் இற்கு தடையவியல் கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பித்திருந்தது .எவ்வாறாயினும், சீபிஎஸ்எல் இந்த அறிக்கைத் திகதி வரை இது தொடர்பாக கம்பனிக்கு எந்த உத்தரவும் வழங்கியிருக்கவில்லை.

**(ஆ) அனுமதிக்கப்படாத தரகுக் கட்டணங்கள்**

2014 இல் இரண்டு தனியார் கம்பனிகளுக்கு (வைட் க்ரோவ் ஹோல்டிங்ஸ் மற்றும் அஸ்ட்ரல் ஹெப்பிடல் ஹோல்டிங்ஸ்) செலுத்திய அனுமதிக்கப்படா தரகுக் கட்டணம் ரூபா 19,725,000 தொடர்பில் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (சீஐடி) கம்பனி முறைப்பாடு ஒன்றினைச் செய்திருந்தது. கட்டணத்தை செலுத்துவதற்கு முன்னர் இந்த இரண்டு கம்பனிகளும் சீபிஎஸ்எல் இல் நிதிக்கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்தியிருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும், 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் இக் கொடுக்கல் வாங்கல்கலை வெளிப்படுத்துவதற்கு கம்பனி தவறியிருந்தது.